தேசிய நாளேடு

# தமிழ் நேசன்

AKHBAR HARIAN TAMIL NESAN

ESTD. 1924 PP. 608/1/93 M.I.T.A(P) 123/01/93

மலர் 69 இதழ் 271 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி மீ 30 உ சனி 12.6.1993



### சென்னையில் மருத்துவக் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதாகக் கூறி

## வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்க தேவனுக்கு உத்தரவு

(ஆனந்தன்)

கோலாலம்பூர், ஜூன் 12- சென்னை மருத்துவ கல்லூரிகளில் இடம் வாங்கி தருவதாக கூறி முன்னாள் அரசு ஊழியரிடம் பெற்ற 45,000 வெள்ளியை வட்டியுடன் உடனடியாக திருப்பிச் செலுத்தும்படி இந்திய ஆடவருக்கு எதிராக இங்குள்ள மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தனது மகனுக்கு மலேசிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சென்னை மருத்துவ கல்லூரிகளில் பயில்வதற்கு இடம் வாங்கி தரும்படி கடந்த 12. 4. 88-ஆம் ஆண்டு திரு. பெர்டி ராஜரத்தினம் என்ற முன்னாள் அரசு ஊழியர் தலைநகர் ஜாலான் மஸ்ஜிட் இந்தியா முதல் மாடி, எண் 60பி, எனும் முகவரியில் செயல்படும் தேவன் ஏஜென்சீஸ் என்ற நிறுவனத்தைச் சேர்ந்த திரு. தேவகண்ணு அலியாஸ் தேவன் என்பவரிடம் முதல் கட்ட பணமாக 20,000 வெள்ளியும் பின்னர் இறுதித் தொகையாக 20. 6. 1988ஆம் ஆண்டு 25,000 வெள்ளியும் கொடுத்ததாக மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கூறப்பட்டது.

இந்த வழக்கில் முன்னாள் அரசு ஊழியர் சார்பில் தலைநகரைச் சேர்ந்த ஜெரல் எலன் கோமஸ் என்பவரும் பணம் வாங்கிய திரு. தேவன் சார்பில் குலோத்துரைசிங்கம் வழக்கறிஞர் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. லீ வி தூன் என்பவரும் ஆஜராகினர்.

இந்த வழக்கின் முழு விபரம் வருமாறு:-

ஓய்வுபெற்ற முன்னாள் அரசு ஊழியரான திரு. பெர்டி ராஜரத்தினம் என்பவர் தனது மகன் மருத்துவம் பயில வேண்டும் என்பதற்காக சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் இடம்வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் கடந்த 10. 4. 88 அன்று திரு. தேவன் என்பவரை சந்தித்து தனது எண்ணத்தை வெளியிட்டு உள்ளார்.

தம்மால் மருத்துவ கல்லூரிகளில் இடம் வாங்கி தரமுடியும் என்றும் அதற்கு 45,000 மலேசிய வெள்ளி செலவாகும் என்று கூறியதாக கூறப்பட்டது.

அவ்வளவு தொகையையும் கொடுக்கச் சம்மதித்த திரு. பெர்டி ராஜரத்தினம் தனது ஓய்வு ஊதிய தொகையை (இ. பி. எஃப். ) எடுத்து இரண்டு தடவை கட்டம் -கட்டமாக பணத்தை செலுத்தியதாக இந்த வழக்கை விசாரித்து வரும் புவான் வான் ஆர்லா முன்னிலையில் கூறப்பட்டது.

முதற்கட்டமாக 12. 4. 88 அன்று 20,000 வெள்ளிக்கு ரொக்க காசோலையும் பின்னர் 20. 6. 88 அன்று 25,000 வெள்ளிக்கு ரொக்க காசோலையும் தான் திரு. தேவனிடம் வழங்கியதாகவும் அதனை அவர் ரொக்கமாக வங்கியின் அதிகாரியின் முன் ரொக்கமாக மாற்றிக் கொண்டதாக திரு. பெர்டி ராஜரத்தினம் நீதிமன்த்தில் கூறினார்.

பணம் கொடுத்து பல வருடங்கள் ஆகியும் தனது மகனுக்கு மருத்துவ கல்வி பயில இடம் கிடைக்காததை கண்டு பணத்தை திருப்பி கொடுக்கும்படி தான் கேட்டுக் கொண்டதாகவும் ஆனால், திரு. தேவன் தன்னை மிரட்டும் பாணியில் நடந்து கொண்டதாகவும் கூறினார்.

பணத்தைத் திரும்ப பெறும் நடவடிக்கையில் தான் ஈடுபட்டபோது எழுந்த வாக்குவாதத்தை ஆடியோ டேஃப் மூலம் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பின்னர் இடை இடையே 5 ஆயிரம், 10 ஆயிரம் வெள்ளி என்று சுமார் 23,000 வெள்ளி திருப்பிக் கொடுத்ததாகவும் அதன் பின்னர் பாக்கி பணத்தை திருப்பிக் கொடுக்க மறுத்து விட்டதாகவும் அதனால் தான் வேறு வழியின்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டதாக அவர் மேலும் தமது சாட்சியத்தில் கூறினார்.

பல தடவை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் நடைபெற்ற விசாரணையில் சாட்சியம் அளித்த திரு. தேவன் தான் திரு. பெர்டி ராஜரத்தினத்திடம் பணம் வாங்கியதை நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டார்.

இந்த வழக்கின் இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிமன்ற தலைவர் புவான் வான் அர்பா திரு. தேவன்

பாக்கி பணமான 22,000 வெள்ளியை வழக்கு தொடரப்பட்ட ஜூலை மாதம் 1989ஆம் ஆண்டு முதல் 8% வட்டி தொகையுடன் செலுத்தும்படியும் வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளில் இருந்து பாக்கி பணத்தை செலுத்தும் வகையில் 8% வட்டியுடன் செலுத்த வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த 9. 6. 1993 அன்று வழங்கப்பட்டது.

---

Our Mr. Gomez represented Bertie Charles in a Civil Suit against Devan Thevakanny. Devan had swindled Charles of his life savings promising to secure a medical seat in India for Charles' son. The Court ruled in favour of Charles after full trial and Devan was ordered to repay all monies taken together with interest and cost.

Reported in the Tamil Daily on the 12/06/1993.